2019 ஜூலை 16]

114—

கூடுதல் மின்மாற்றி

***12657—திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், ப. முத்துலிங்காபுரம் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ப. முத்துலிங்காபுரம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் அதிகாரிகளுடன் கலந்துபேசும்போது V. முத்துலிங்காபுரம் என்று சொல்லியிருக்கிறார்கள். V. முத்துலிங்காபுரத்தில் ஏற்கெனவே 100 KVA மின்மாற்றி இருக்கின்றது. அங்கே 90 KVA அளவுக்கு மின்பளு இருக்கின்றது. அதனைக் கருத்தில் கொண்டுதான் அதிக மின்னழுத்த மின்சாரம் கொண்டுவருவதற்காக 2.23 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏற்கெனவே இருந்த மின் கம்பிகளை மாற்றி, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழகத் தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், V. முத்துலிங்காபுரம் கிராமம் விவசாயம் நிறைந்த ஊராகும். விவசாயம் அதிகமாக செய்யக்கூடிய சோரம்பட்டி,*

கட்டணாம்பட்டி, பெத்துசெட்டிப்பட்டி கிராமங்களெல்லாம் அருகிலே அமைந்திருக்கின்றன. அந்த ஊராட்சியிலே குறைந்த மின்னழுத்தம் உள்ள காரணத்தால் விவசாய பம்ப்செட் மோட்டார்களை இயக்குவது சிரமமாக இருக்கிறது. வீடுகளிலே இருக்கக்கூடிய மிக்சி, கிரைண்டர், ஃபேன் மற்றும் தெரு விளக்குகளை எல்லாம் இயக்குவதும் சிரமமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கிராமத்திலே 100 KVA கொண்ட மின்மாற்றி இயங்கிக்கொண்டிருக்கின்றது என்று கூறியுள்ளார்கள். கூடுதலாக 100 KVA கொண்ட மின்மாற்றியை அமைத்துக் கொடுத்தால், அங்கே சிரமமின்றி பயன்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய V. முத்துலிங்காபுரம் கிராமத்தில் ஏற்கெனவே 22 விவசாய இணைப்புகளும் 308 வீடுகளும் 15 மேல்நிலைத் தொட்டிகளும், 15 வணிக இணைப்புகளும் இருக்கின்றன. 90 KVA அளவுக்கு மின்பளு இருப்பது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே 100 KVA மின்மாற்றி அமைப்பதற்காக post எல்லாம் நட்டு, transformer வைக்கப்பட்டது. Connection கொடுக்கின்ற நேரத்தில், அந்த வீட்டில் குடியிருப்பவர், 'அந்த connection கொடுத்தீர்களென்று சொன்னால், நான் தற்கொலை செய்துகொள்வேன்' என்று மிரட்டிய காரணத்தினால், இதுகாறும் மின் supply கொடுக்க முடியாமல் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர். அந்த இடத்தில் 100 KVA மின்மாற்றி அமைக்கப்பட்டு, மின் இணைப்பு கொடுப்பதற்கு எல்லாம் தயாராக இருக்கிறது. இப்பொழுது சொன்னீர்கள் என்றால்கூட மத்தியானமே நாங்கள் connection கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அந்த நபரை அழைத்துப் பேசி நீங்கள் சமாதானம் செய்து விட்டீர்களென்றால், உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2019 ஜூலை 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே புதிதாக ஒரு மின்மாற்றி அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து அந்த மின்மாற்றியை அமைப்பதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து, அதைச் செய்துகொடுப்பேன் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். நான் வினாவில் கூறிய கிராமத்தைப்போன்று விருதுநகர் ஒன்றியத்திலுள்ள பாவாலி ஊராட்சி, பாவாலி கிராமத்திலும், சிவஞானபுரம் ஊராட்சி, சின்னமூப்பன்பட்டி கிராமத்திலும், புல்லக்கோட்டை ஊராட்சி, புல்லக்கோட்டை கிராமத்திலும் குறைந்த மின்னழுத்த மின்சாரமே கிடைக்கிறது. அந்தக் கிராமங்களுக்கும் தலா 100* KVA *கொண்ட கூடுதல் மின்மாற்றி அமைத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகம் மின்மிகை மாநிலம் என்று கூறுகிறார்கள். அப்படியிருந்தும், விவசாயம் செய்யக்கூடிய விவசாய பம்ப்செட் மோட்டார்களுக்கு பகல் நேரத்தில் 3 மணி நேரமும், இரவு நேரத்தில் 6 மணி நேரமும்தான் மின்சாரம் வழங்கப்படுகின்றது. இதை மாற்றி நாள் முழுவதும் மும்முனை மின்சாரம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள* V. *முத்துலிங்காபுரத்தில் மின்மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றது. மின் இணைப்பு கொடுப்பது மட்டும்தான்* pending*–ல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாக அவரிடம் தொடர்புகொண்டு பேசி சரிசெய்வீர்களென்று சொன்னால், இன்றைய தினமே கொடுத்துவிடுகிறோம். மற்ற பகுதிகளில் மின்பளு குறைவாக இருக்கின்றது; அதனால் புதிதாக மின்மாற்றி வேண்டுமென்று சொல்லியிருக்கின்றீர்கள். நீங்கள் சொன்ன பகுதிகளை நாங்கள் குறித்துக்கொண்டிருக்கிறோம். ஆய்வு செய்து தேவைப்படின், மின்மாற்றி அமைத்துக் கொடுப்பதற்குத்*

தயாராக இருக்கின்றோம். தமிழகம் மின்மிகை மாநிலமாக இருப்பதனால், மும்முனை மின்சாரம் 24 மணி நேரமும் வழங்க வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றீர்கள். பகல் நேரத்தில் கிட்டத்தட்ட 2,000 மெகாவாட் அளவுக்கு சோலார் மின்சாரம் வருகிறது. இப்பொழுது கிட்டத்தட்ட இரண்டு மாதகாலமாக பகலிலே 3 மணி நேரமல்ல, 5 மணி நேரம் முதல் 8 மணி நேரம் வரை மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இரவு நேரங்களில் 6 மணி நேரம் முதல் 9 மணி நேரம் வரை மின்சாரம் கொடுக்கிறோம். அதுவும் 9 மணிநேரம்தான் என்ற கணக்கு இல்லாமல் மின்சாரம் அதிகமாக இருக்கின்றபோது அதிகமாகவும் கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்கூட அன்று பேசும்போது மும்முனை மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். விவசாய மின் இணைப்பு வழியிலே ஏதாவது தொழிற்சாலைகள் இருந்ததென்றால், இருமுனை மின்சாரமாக வருகின்றபோது, அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அதை எந்த அடிப்படையில் எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று நாங்கள் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரம்பூர் தொகுதியில் 34 மற்றும் 35–வது வார்டுகளில் மேலே செல்லும் மின் கம்பிகளை புதைவடமாக மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினமே நான் சொல்லியிருக்கின்றேன்.

பெரம்பூர் பகுதி உட்பட, கிட்டத்தட்ட 960 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒவ்வொரு பகுதியாக புதைவடத் தடமாக அமைப்பதற்குண்டான பணிகள் ரூ.2,567 கோடி செலவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் தொகுதியிலும் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் முழுவதுமாக புதைவடத் தடமாக அமைக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். நிதி நிலைமைக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதியாக நாங்கள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றோம். பெரம்பூரைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே டெண்டர் விடப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

பாலம் கட்டுதல்

***270—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதி–வண்டிகோட்டகம் சாலையில் கோரையாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*